★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 53630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: பங்குனி 8உ புதன் (21—3—56) ★ ★ வெளியூர்: பங்குனி 9உ வியாழன் (22—3—56) [இதழ் 238

275 படுக்கை கொண்ட மருத்துவமனையில் 600 நோயாளிகள்!

திருச்சியிலும் இட்லி-சாம்பாருக்கு ஏற்பாடு

275 படுக்கைகள்மட்டும் கொண்ட மருத்துவமனையில் 600 நோயாளிகள் தங்கி சிகிச்சை பெறும் நெருக்கடியான நிலை திருச்சி மருத்துவமனை ஒன்றில்—காந்தி நினைவு தலைமை மருத்துவமனையில் நிலவுகிறதாம்.

இதில் சுமார் 300 பேர்களுக்குச் சாதாரண உணவும்.

(4-ம் பக்கம் பார்க்க)

தொழிலாளர் நலனில் சென்னை சர்க்காரின் அக்கரையின்மை

தொழிற்சட்டங்கள் சரிவர அமுல் செய்யப்படுவதில்லை

சர்க்கார் கொள்கையில் மாறுதல் வேண்டும்

சட்ட சபையில் எதிர்க் கட்சியினர் பலத்த கண்டனக் குரல்

சென்னை சர்க்கார், தொழிலாளர் நலன்களில் தொடர்ந்து எவ்வித அக்கரையும் காட்டாமலிருந்து வருவது குறித்து, சென்னை சட்டசபையில் பல எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பலத்த கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள்.

'மாநிலத்தில், தொழில்துறை நிர்வாகத்தில் அமைதி நிலவுவதாகக் காணோம்'—என்ற குற்றச்சாட்டு கிளப்பப்பட்டிருக்கிறது.

ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டியவை என்று கூறப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் திருப்திகரமாக அமுலாக வேண்டுமானால், சர்க்காரின் இப்போதைய கொள்கையில் பெரியதொரு மாற்றம் தேவை என்பது வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

ப. ஜீவானந்தம்:

"குறைந்தபட்ச சம்பள நிர்ணயம் போன்ற தொழிலாளருக்கான அடிப்படைச் சட்டங்கள், கண்டிப்பாக அமுல் செய்யப்படுவதில்லை. அவற்றை அமுல் செய்வதற்கு போதுமான அதிகாரம் படைத்தவையாக தொழிலாளர் இலாகாக்கள் இல்லை. தொழிலாளர்களின் குறைகளை நிவர்த்திக்க தொழிலாளர் இலாகா பயன்படுவதாக அமையவில்லை.

"நெய்வேலியில், நீர் இறைக்கும். பரிசோதனைக்காகப் புதிதாக 800 தொழிலாளர்கள் வரை அமர்த்தப்பட்டனர்; ஆனால், போதுமான வேலை இல்லை என்று கூறி, சில நாட்களுக்கு முன்பு வேலையிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளர்கள் எவருமே மீண்டும் இப்போது வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படாதது வருந்தத்தக்கதாகும்.

"சராசரியாக சர்க்கார் கணக்குப்படி, ஆண்டுதோறும் மாநிலத்தில் 200 வேலைநிறுத்தங்கள் நடைபெறுகின்றன; ஆனால், அவையெல்லாம் தொழிலாளர் தலைவர்களின் தலையீட்டின் பேரிலேயே தீர்த்து வைக்கப்படுகின்றனவே தவிர, முதலாளிகளின் நியாய உணர்வினாலோ, அல்லது சர்க்காராலோ, அவர்களது தொழிலாளர் இலாகாவாலோ அல்ல. இந்த நிலையில் தான் உள்ளது, சர்க்காரின் தொழிலாளர் நலன் பேணும் முறை!

"1954 — 55-ம் ஆண்டுகளில், பி. அண்டு. சி. ஆலையின் இலாபக் கணக்கைப் பார்க்கும் போது, தொழிலாளர்களுக்கு இப்போது தரப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளதைக் காட்டிலும் அதிகமான போனஸ் தரப்படவேண்டும்."

எஸ். சி. சி. அந்தோணி:

'தொழில் தகராறுகளைத் தீர்த்து வைப்பதிலும், மாநிலத்தில் தொழில் துறை அமைதியைக்காக்கவும், சர்க்கார் விசனிக்கத் தகுந்த அளவு, தோல்வி கண்டிருக்கிறார்கள்.

"நியமிக்கப்பட்டுள்ள தொழிலாளர் நல இலாகா அதிகாரிகள், தொழிலாளருக்கான சட்டங்களை அமுல் செய்வதற்காக இருக்கிறார்களா, அல்லது அவற்றை அவமதிப்பதற்காக இருக்கிறார்களா என்று சந்தேகம் எழுகிறது.

"சன்னஞ் சன்னமாக வேலையைத் தந்து, அவற்றிற்கு எவ்வளவு கூலி என்பது போன்ற விபரங்களையே தொழிலாளர்களுக்குத் தெரிவிக்காது விடுத்து, புதிய முறை ஒன்றை கூலிவழங்குவதற்காகப் புகுத்த சட்ட விரோதமாக முயற்சித்தனர்—பெரம்பூர் டி. ஐ. சைகிள் தொழிற்சாலை நிர்வாகிகள்!

(4-ம் பக்கம் பார்க்க)

தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படாது

பாக். குடியரசு விழாவை ஒட்டி முடிவு

லாகூர், மார்ச் 20—

வரும் மார்ச் 23-ந் தேதியன்று தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட வேண்டிய நாளாக விதிக்கப்பட்டுள்ள எல்லாக் கைதிகளுக்கும், அன்று குடியரசு தின விழாவாகையால், மேற்கு பாகிஸ்தான் சர்க்கார் அவர்களின் தண்டனையைக் குறைக்க முடிவு செய்திருக்கிறது.

உளவு வேலை செய்ததாகத் தண்டிக்கப்பட்டுள்ளவர்களைத் தவிர இதர எல்லா அரசியல் கைதிகளையும் விடுவித்து விடவும் மேற்கு பாகிஸ்தான் மாநில சர்க்கார் முடிவெடுத்திருக்கின்றனராம்.

மற்றும் இதர கைதிகளுக்கும், தண்டனைக் காலத்தைத் தாராளமாகக் குறைக்கவும் தீர்மானித்திருக்கிறதாம்.

தமிழர்களைச் சுட்டுக் கொன்ற பட்டம் தாணுவிற்கு மீண்டும் பதவி?

திரு-கொச்சி தமிழர்கள் குலைநடுக்கம்

எல்லா இடதுசாரிகளும் ஆதரிக்கின்றனராம்

சபைத் தலைவர் அல்லாது 59 உறுப்பினர்களின் ஆதரவு தனக்கிருப்பதால், தான் மந்திரி சபை அமைக்கத் தயாராக இருப்பதாகப் பட்டம் தாணு பிள்ளை, திரு-கொச்சி இராஜப்பிரமுகரிடத்தில் தெரிவித்தாராம்.

பட்டம் தாணு மீண்டும் பதவியில் அமருவார் என்ற சந்தேகமான செய்திகளே, மக்களுக்குப் பெரும் குலைநடுக்கம் தருவதாயிருக்கிறதாம்.

பட்டத்தின் கோரிக்கையைக் கவனிப்பதாகவும், அவர் மந்திரி சபை அமைப்பதற்குரிய சாத்தியக்கூறுகளை ஆராய்வதாகவும் அடுத்து பதில் தருவதாகவும் இராஜப்பிரமுகர் கூறினாராம்.

கம்யூனிஸ்டுக் கட்சி, கேரள சோஷலிஸ்டுக்கட்சி, புரட்சி சோஷலிஸ்டுக்கட்சி, பிரஜா-சோஷலிஸ்டுக்கட்சி ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள், வேறு ஐந்து உறுப்பினர்கள் சேர்ந்த 59 பேர் தனக்கு ஆதரவு தருவதாகப் பட்டம் தாணு பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறாராம்.

இதர கட்சியினரெல்லாம் தனக்கு நிபந்தனை எதுமின்றியே ஆதரவு தருவதாயும் தாணு பிள்ளை தெரிவித்தாராம்.

இன்னும் இரண்டொரு உறுப்பினர்கள் ஆதரவு தருவது குறித்து சீக்கிரமே முடிவு தெரியும் என்றும் அப்போது இன்னும் அதிகமான பலம் தனக்கு இருக்குமென்றும் பட்டம் பகன்றாராம்!

'இடதுசாரிகளான இவர்கள் அனைவரும் ஒரே கோஷ்டியாகச் சேரவேண்டும் என்று இராஜப்பிரமுகர் கோரினாரா?' என்று கேட்கப்பட்டபோது, 'இல்லை' என்று மறுத்துரைத்திருக்கிறார், பட்டம்!

திரு-கொச்சி தமிழ்வட்டங்கள் தமிழகத்துடன் இணைய வேண்டும் என்பதற்காகப் போராடிய தமிழர்களைச் சுட்டுக்கொன்ற பட்டம் தாணுவிற்கு மீண்டும் பதவியில் அமரச் சந்தர்ப்பம் தரும் வகையில் இடசாரிகள் அவருக்கு ஆதரவு அளிக்க முன்வந்திருப்பது பல பகுதி மக்களிடையேயும் — குறிப்பாகத் தமிழ் மக்களிடையே பெரும் பரபரப்பையூட்டியிருப்பதாகத் தெரிய வருகிறது.

'தனி மனித சர்வாதிகாரம் ரஷ்யாவில் இனி தலையெடுக்காது'

'நாடு தூய்மைப் படுத்தப்பட்டு விட்டது'

நிகழ்ந்துவரும் மாற்றங்கள் குறித்து மாலங்காவ்

"தனி மனித சர்வாதிகாரம் இனி ரஷ்யாவில் திரும்பாது; கூட்டு சர்க்கார் உறுதியாக அமைக்கப்பட்டுவிட்டது.

"கூட்டுத் தலைமை நியமிக்கப்பட்டிருப்பதில் முக்கியமானது —கூட்டுத் தலைமையைக் கண்டிக்க, விமர்சிக்க சோவியத் மக்கள் உரிமை பெறுகிறார்கள். அப்படிக் கண்டிப்பவர்கள் தலைமைக்கோ, கட்சிக்கோ, மக்களுக்கோ 'துரோகிகள்' என்ற பட்டத்தை—பழியை இனி சுமக்க வேண்டியிராது"

என்று, ரஷ்யாவின் முன்னாள் பிரதமரான மாலங்காவ், பிரிட்டிஷ் தொழிற்சங்கத்தவர் தந்த விருந்தொன்றில், கேள்விகள் பலவற்றிற்குப் பதிலளிக்கையில் தெரிவித்ததாகத் தொழிற்கட்சியினர் கூறுகின்றனர்.

'கேள்விகளுக்கு, திறந்த மனதோடு மாலங்காவ் பதிலளித்தார்' என்று தொழிற்கட்சிப் பொதுச் செயலாளரான மார்கன் பிலிட்ஸ் தெரிவித்திருக்கிறார்.

அண்மையில் சோவியத்தில் ஜார்ஜியா பகுதியில் கலவரங்கள் நடைபெற்றதுபற்றிக் கேட்ட போது, 'அவை கலவரங்கள் அல்ல; ஆர்ப்பாட்டங்கள்தான்' என்று மாலங்காவ் கூறினாராம்.

ஸ்டாலின் பற்றிக் குருஷ்சேவ் பேசியது குறித்துக் கேட்டபோது, 'ரஷ்யாவை நாங்கள் இப்போது தூய்மைப்படுத்திவிட்டோம்; தீயனவற்றைக் களைந்துவிட்டோம்; சர்வாதிகாரத்தைக் களைந்துவிட்டோம்—கிழித்திவிட்டோம்; கூட்டு சர்க்கார் அமைத்துவிட்டோம்; இனி கவலைகொள்ளத் தேவையில்லை' என்பதாக மாலங்காவ் தெரிவித்தாராம்.

மாலங்காவ், தொழிலாளர் ஒற்றுமை குறித்தும் உலக சமாதானம் குறித்துமே அதிகம் பேச விரும்பினார்; என்றாலும், தொழிற்கட்சியினர் அவரை அண்மையில் ரஷ்யாவில் நிகழ்ந்த சம்பவங்களைக் குறித்தே மடக்கி மடக்கிக் கேள்விகள் கேட்டனராம்.

ரஷ்யாவில் நிகழும் மாற்றங்கள் மேற்கத்திய நாடுகளுடன் நட்புறவு கொள்வதற்காகவே என்பது தெளிவு என்றும் மாலங்காவ் கூறியதாகத் தொழிற்கட்சியினர் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கின்றனராம்.

பெயர்போன 'ஜீப் கார் ஊழல்'

ஏமாளிகளாக்கியோர் மீது வழக்கு தொடுக்கிறதாம் டில்லி!

'ஜீப் கார் ஊழல்', டில்லி சர்க்காரின் பெயர்போன ஊழல்களில் ஒன்றல்லவா?

அந்த ஊழலினால், பல இலட்சம் ரூபாய்—பாமரரின் வரிப் பணம் பாழான விவரமும் நாடறிந்தது தானே!

இப்போது டில்லிப் பெரிய மனிதர்கள் வழக்குத் தொடரப் போகிறார்களாம், அவர்களை ஏமாளிகளாக்கிய எத்தர்கள் மீது!

1,007 'ஜீப்கார்கள்' வழங்குவதாக ஒப்பந்தம் செய்துகொண்டு, பணமும் பல இலட்சம் வாங்கிக்கொண்டு, 50 கார்கள் மட்டுமே தந்துள்ளார்கள் என்றும், 1951-ல் கையெழுத்தான அந்த ஒப்பந்தப்படி இன்னும் எஞ்சிய ஜீப் கார்கள் தரப்படவே இல்லை என்றும் குறித்தே வழக்கு என்றும் கூறப்படுகிறது.

பாதுகாப்பு இலாகா அமைச்சர் டாக்டர் கே. என். கட்ஜு மக்கள் சபையில் இதைத் தெரிவித்திருக்கிறார்.

புதுவை: சட்டபூர்வமான அதிகார மாற்றம்

தாமதிக்காது என்கிறார் நேரு

முன்னாள் பிரெஞ்சுத் திட்டுக்களான புதுவை, காரைக்கால் பகுதிகளின் சட்டபூர்வமான அதிகார மாற்றம் நீண்ட நாளைக்கு இழுத்துக் கடத்தப்படமாட்டாது.

"பிரெஞ்சு வெளி விவகார மந்திரி பினே, அண்மையில் டில்லி வருவதற்கு முன்பாக, பிரெஞ்சு சர்க்காரிடமிருந்து இந்தப் பகுதிகளின் சட்டபூர்வ அதிகார மாற்றம் குறித்து நகல் ஒப்பந்தம் ஒன்று நமக்குக் கிடைத்தது.

"அந்த உடன்படிக்கையை ஒப்புக்கொள்வதில் நமக்கேதும் கஷ்டமிருக்க முடியாது என்பதால் சட்டபூர்வ மாற்றம் தாமதிக்காது என்று கருதுகிறேன்."

என்பதாக, பிரதமர் நேரு, டில்லி மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 21—3—'56 புதன்

வசை உமிழும் உருவம்

★

லயோலா கல்லூரி [illegible] பேரவையில் துவக்கிய [illegible] உமிழும் வகை கெட்[illegible] செயலை, விடாதுத் தொடர்[illegible] செய்து வருகிறார் [illegible]லமைச்சர் காமராசர். அவர் உமிழும் ஒவ்வொரு வசைச் சொல்லும் அவர் முதலமைச்சர் வேடத்திலிருந்து பெருந் தன்மை காட்டிவந்தது வெறும் போலி என்பதை வலியுறுத்திக் காட்டுகின்றன. அவர் முக மூடியைக் கிழித்தெறிந்து, 'முன்னாள் கருப்பனே கருப்பன்' என அவரை முச்சந்திக்கு இழுத்துவந்து நிறுத்துகிறது, அவர் உமிழும் வசைமாரி.

எந்த உயர்ந்த நோக்கங்களுக்காக சர்வ கட்சிக் கூட்டணி உருவெடுத்ததோ, அந்த உயர்ந்த நோக்கங்களில் உள்ள நியாய பலத்தைக் கண்டு அச்சங்கொண்டு, அவைகளை மறுத்துக் கூறும் திறனற்றுப்போன நிலையில் எரிச்சல் அடைந்து, கூட்டணி பற்றிக் கண்டபடி எல்லாம் உளறி வழிந்துவரும், தமக்கு இயல்பானப் பணியினைச் செய்யத் தொடங்கி இருக்கிறார் முதலமைச்சர். கூட்டணியின் கோரிக்கைகளில் இருக்கும் நியாயத்தைக் கண்டதும் ஏற்பட்ட எரிச்சல், கூட்டணியின் தூண்டுதலால் வெற்றிகரமாக நிறைவேறிய பொதுவேலைநிறுத்தமும், கடையடைப்பும் முதலமைச்சரிடம் ஆத்திரமாக உருவெடுத்து இருக்கிறது. எனவே, கூட்டணியின்மீது, அவர் தனது வழக்கமான ஏசல் அம்புகளைத் தொடுக்க முனைந்திருக்கிறார்.

முதலமைச்சரின் ஆசை மொழிகளுக்கும், சிண்டு முடிந்துவிடும் சிறு செயல்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும், அடக்குமுறைகளுக்கும் அசைந்து கொடுக்காத கூட்டணியா, அவர் உமிழும் வசைச் சொற்களுக்கு அசைந்துவிடப் போகிறது? ஒருக்காலுமில்லை. ஆனால், அவர் எதிர்பார்ப்பதற்கு மாறாக, அவருடைய கெடுமதியையும் இழிகுணத்தையும் மீண்டும் ஒருமுறை உணர்ந்து அனுபவித்து, அருவறுக்கும் அரிய வாய்ப்பு, மீண்டும் தமிழ் மக்களுக்குத் தொடர்ந்து கிடைக்கப்போகிறது.

கூட்டணி ஒரு விசித்திர ஆக்கமாம். இலட்சிய அடிப்படை இல்லாது உருவாகியுள்ள ஒரு அமைப்பாம். அது நீடித்து நிற்காதுச் சீரழிந்து போகுமாம். இவ்வாறு இயம்புகிறார் தமிழ்க் குடிமக்களுக்கு இரண்டாம் வரிசை துரோகியாக விளங்கிவரும் முதலமைச்சர்.

அவர் கூற்றில் உள்ளப் பொருந்தாத் தன்மையை ஆராய்வதற்குமுன், கூட்டணி பற்றி அவர் கூறிய குற்றச்சாட்டு, அவரை ஒரு எடுபிடியாகக்கொண்டுள்ள காங்கிரஸ் கட்சிக்குப் பொருந்துமா, பொருந்தாதா என்பதைப் பார்ப்போம்.

இலட்சிய அடிப்படையில் கூட்டணி உருவாகவில்லை; எனவே அது நீடித்து நிற்காது சீரழிந்துவிடும் என்னும் முதலமைச்சர் கூற்றை பொருந்தக் கூடியது என்றே வைத்துக் கொண்டாலும், அவர் கருத்துப்படி இலட்சிய அடிப்படை உள்ள காங்கிரஸ் கட்சியில் கோஷ்டிச் சண்டை இருக்கிறதே, அது இருக்கலாமா? அது நியாயமா? அகில இந்திய காங்கிரஸ் அமைப்பு முதல், நகர காங்கிரஸ் அமைப்புகள் வரை, சந்தி சிரிக்கும் வகையில் தினம் தினம் கோஷ்டிப் பூசல் மூக்கைத் துளைக்கிறதே, அவைகளுக்குக் காமராசர் என்ன சொல்லுகிறார்? அவர் சொல்லுகிறபடி இலட்சிய அடிப்படை இல்லாத சர்வ கட்சிக் கூட்டணியில் வேண்டுமானால், அப்போக்கு இருப்பதை நியாயமாகக் கொள்ளக்கூடும். ஆனால், இலட்சிய அடிப்படை இருப்பதாகக் கூறப்படும் காங்கிரசில், அத்திப் பழத்தைப் புட்டால் அத்தனையும் சொத்தை என்பதுபோல், கோஷ்டிக் குத்து வெட்டே கோரத் தாண்டவம் ஆடிக்கொண்டு இருக்கிறதே, அது ஏன்? முதலமைச்சர் காமராசர் இதற்கு நாணயமாகப் பதில் சொல்ல வேண்டும்.

பிரகாசம் விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்டு ஓராண்டு கழித்து விரட்டப்பட்டார்! ஓமந்தூரார் வருந்தி அழைக்கப்பட்டு ஓராண்டுக் கழித்து வெறுத்து விலக்கப்பட்டார்! குமாரசாமியார் கும்பிட்டுக் கொள்ளப்பட்டு, பொதுத் தேர்தல் பலனை, பதவியை விட்டு வெளியேற்றப்படாமல் இறுதி வரை நிலைத்து இருந்தார்!

அவை மட்டுமா? ஆச்சாரியார் விரட்டியடிக்கப்பட்டு, காமராசர் முடி சூட்டிக்கொண்டார்.

ஏனையா, முதலமைச்சரே, இலட்சிய அடிப்படை உடைய காங்கிரஸ் கட்சியில், காங்கிரஸ் தலைவர்களுக்குள்ளாகவே, இந்தத் தப்பிலித்தனம் இருக்க வேண்டும்? வெட்கத்தால் மௌனியாகிவிட மாட்டார் முதலமைச்சர் என்பதுநமக்குத் தெரியும்—ஆனால், வகைகெட்டு வசை உமிழ்வார் அந்த மகானுபாவர். எனவே, அதைவிடுத்து, நாணயமாக நியாயம் கூறும்படி, அவரைக் கேட்டுக்கொள்கிறோம். வசை உமிழும் உருவமாகவே அவர் இருக்கப்போகிறாரா அல்லது பொறுப்புள்ள முதலமைச்சர் எனக் காட்டிக் கொள்ளப் போகிறாரா என்பதைப் பார்ப்போம்.

"தற்போதுள்ள கல்வி முறை இலக்கியக் கல்வியாக இருப்பதும், அது, தேசியப் பண்பாட்டைப் புறக்கணிப்பதும், தற்போதைய கல்வி முறையில் காணப்படும் இரு குறைபாடுகள்" என்று டாக்டர் இராதாகிருஷ்ணன் கூறியிருக்கிறார்.

காமராசர் அடக்குமுறைக்கு ஆளான மாவீரர்கள்

88 உடுமலை வட்டாரத் தோழர்களின் 2-வார சிறைவாசம் முடிந்தது

53 கணியூர் தோழர்கள்மீது 'ஜப்தி' வாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது

மதியழகன், வில்லாளன் சுற்றுப்பயணம்

பிப்ரவரி 20—பொது வேலை நிறுத்தத்தில், உடுமலை வட்டாரம் சீரிய முறையில் கலந்து கொண்டு சிறப்பானதோர் இடத்தைப் பெற்றது. உடுமலை, கணியூர், வாளவாடி ஆகிய இடங்களில் 200-க்கு மேற்பட்ட தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

உடுமலையில் கைது செய்யப்பட்ட 35 தோழர்கள், உடுமலைப்பேட்டை சப்-மாஜிஸ்திரேட்டால் 2 வாரம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, கோவை சென்ட்ரல் ஜெயிலில் வைக்கப்பட்டு, சிறைவாசத்தை முடித்துக்கொண்டு மீண்டுள்ளனர்.

கணியூரில் கைது செய்யப்பட்ட 53 தோழர்களில் 46 தோழர்களுக்கு ஒருவார சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, உடுமலை சிறையில் வைக்கப்பட்டிருந்தனர். மீதி ஏழுபேர்களுக்கு 2 வார சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு கோவை சென்ட்ரல் ஜெயிலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களும் சிறைவாசம் முடிந்து மீண்டுள்ளனர். எல்லாத் தோழர்களுக்கும் உடுமலை சப்-மாஜிஸ்திரேட்டால் ரூ. 10 அபராதம் விதிக்கப்பட்டது. அதைக்கட்ட மறுத்து அனைவரும் சிறைபுகுந்தனர்.

ஆனால் சிறைவாசத்திற்குப் பிறகு அபராதத்தை வசூலிக்குமாறு கணியூரைச் சேர்ந்த 53 தோழர்கள்மீதும் 'ஜப்தி'வாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வாளவாடி என்ற ஊரில் 125 பேரைக் கைது செய்து உடுமலை அழைத்து வந்தனர். அந்த ஊரிலுள்ள தாய்மார்கள், குழந்தைகள் உட்பட ஊர்வலமாக வந்து, 'எங்களையும் கைது செய்து கொள்ளுங்கள்' என அதிகாரிகளிடம் கூறினர். பொங்கி வழிந்த ஆர்வத்தின் முன்பு, போலீஸ் அதிகாரிகள் பணிந்தனர். மறுநாள் கைது செய்யப்பட்ட தோழர்களை விடுதலை செய்தனர்.

சிறை சென்ற தோழர்களில் பெரும்பாலானவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்.

மார்ச் 13, 14, 15 ஆகிய தேதிகளில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கணியூர், வெஞ்சமடை, எலையமுத்தூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் சிறைவாசம் அனுபவித்து மீண்டிருக்கும் தோழர்களைத் தோழர் மதியழகன், "உங்கள் தியாகம் வீண் போகாது. உங்கள் தூய உணர்வின் முன்பு அடக்குமுறை அம்புகள் கூர் மழுங்கி வருகின்றன. அவை நெடுநாள் பயன்படப் போவதில்லை. தமிழரின் பெரும் போராட்டத்தில் கலந்துகொண்டு தியாக முத்திரை பெற்ற நமது வட்டாரத் தோழர்களைக் கண்டு நான் பெருமைப்படுகின்றேன்; எனது வாழ்த்துதல்களைத் தெரிவிக்கிறேன்" என்று பாராட்டினார்.

உடுமலையில் கைது செய்யப்பட்டு சிறைத் தண்டனை அனுபவித்தோர் விவரம் :—

திராவிட முன்னேற்றக் கழகத்தைச்சேர்ந்த தோழர்கள் க. சுப்பிரமணியம், இரத்தினம், லத்தீப், கனகன், வெங்கிடசாமி, வேலுசாமி, நாச்சிமுத்து, தியாகராசன், சையத்கபூர், பிச்சைமுகமது, கருப்பண்ணன், இராசு, பொன்னப்பன், ப. நாராயணன், இராமநாதன், ஆர். இராமசாமி, இராமசாமி, இலட்சுமணசாமி, வேலுச்சாமி, குருசாமி, புருஷோத்தமன், கோவிந்தன், அங்கமுத்து, கிருட்டிணசாமி ஆகியோரும்; சோஷலிஸ்டுக் கட்சியைச்சேர்ந்த தோழர்கள் மாரிமுத்து, முத்துச்சாமி, தங்கராசு, நாச்சிமுத்து, நாராயணசாமி, பொன்னுசாமி ஆகியோரும்; பிரஜா-சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த தோழர்கள் தங்கவேலு, த. சீனுவாசன், தாமோதரன், சுப்பிரமணியன், மௌனசாமி ஆகியோருமாவர்.

கணியூரில் கைதாகி சிறைப்பட்டோர் விபரம் வருமாறு :—

திராவிட முன்னேற்றக் கழகத்தைச்சேர்ந்த தோழர்கள் சின்னசாமி, டி. நாட்ராயன், எஸ். நாட்ராயன், மாரியப்பன், முருகேசன், அருணாசலம், கடத்தூர் தோழர்கள் கே. எம். தண்டபாணி, நடராசன், கணியூர் தோழர்கள் கே. ஏ. கோபால்சாமி, இலட்சுமணன், சர்க்கரை, இராமசாமி, ஆறுமுகம், ஜெயராமன், இராஜன், டி. மாணிக்கம், பாலகணபதி, ஆர். ஆறுமுகம், கே. ஏ. கிருஷ்ணன், கே. வி. தியாகராசன், கடத்தூர் கே. எஸ். வேலுச்சாமி, என். இராதா, கே. ஏ. சண்முகம், கிருஷ்ணன், கே. இராமசாமி, என். நாகப்பன், பி. குருசாமி, கே. துரைசாமி, எஸ். இராமசாமி, வஞ்சிபுரம் பொன்னுசாமி, தங்கவேலு, நாட்ராயன், கே. ஆறுமுகம், கருப்பணன், வெங்கிடாசலம் ஆகியோரும், விவசாய சங்கத்தைச் சேர்ந்த தோழர்கள் வேலுச்சாமி கவுண்டர், ஆர். கருப்பணன், நடராசன், துரைசாமி, கடத்தூர் தோழர்கள் பொன்னுசாமி, காளிமுத்து, இராசு, தங்கராசு, அய்யாவு, சிவலிங்கம், ப கருப்பணன், பெரியசாமி, ஆறுமுகம்; மாசாணன், எஸ். கிருஷ்ணமூர்த்தி, ஆறுமுகம், கிருஷ்ணசாமி ஆகியோராவர்.

உடுமலை வட்டாரத்தில் இந்த நிகழ்ச்சிகள் பெரிய பரபரப்பையும் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளன.

★

குணியமுத்தூர் :

மார்ச் 12 திங்கட்கிழமை மாலை கோயம்புத்தூரை அடுத்த குணியமுத்தூரில் தி. மு. கழக பொதுக் கூட்டம் தோழர் தங்கமாணிக்கம் தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் கோவை நகர தி. மு. கழக செயலாளர் எஸ் ஏ. இராசமாணிக்கம், தி. மு. கழக மாநில மாணவர் கிளைச் செயற் குழு உறுப்பினர் சி. டி. தண்டபாணி, 'தம்பி' ஆசிரியர் தில்லை-வில்லாளன், கே. ஏ. மதியழகன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கணியூர் :

மார்ச் 13-ந் தேதி செவ்வாய் மாலை, கணியூர் அழகிரி மன்றத்தின் சார்பில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

உடுமலை தி. மு. கழக மாணவர் கிளைச் செயலாளர் கிருஷ்ணசாமி, உடுமலை-ப. நாராயணன் ஆகியோர் பேசிய பின்பு தோழர் தில்லை-வில்லாளன் நகைச்சுவைத் ததும்ப அரியதோர் சொற்பொழிவாற்றினார். தோழர் கே. ஏ. மதியழகன் தலைமை தாங்கினார்.

★

வெஞ்சமடை :

உடுமலை வெங்கடேசுவரா ஆலையை அடுத்துள்ள வெஞ்சமடை தி. மு. கழகச் சார்பில் மார்ச் 14-ந் தேதி புதன் கிழமை தோழர் கிருட்ணசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் கே. ஏ. மதியழகன், தில்லை-வில்லாளன், உடுமலை-நாராயணன், புலவர் பண்ணன் ஆகியோர் பேசினர்.

15—3—56 வியாழன் காலை வெஞ்சமடையில் கோவை பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத் துணைத் தலைவர் தோழர் வேலுச்சாமி தலைமையில் நடைபெற்ற முருகையன்—பர்வதம்; முத்துக்குமாரசாமி—சரஸ்வதி ஆகியோர் திருமணங்களில் தோழர்கள் கே. ஏ. மதியழகன், தில்லை-வில்லாளன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

★

அமராவதிநகர் :

மூன்று கோடி ரூபாய் செலவில் உடுமலைக்கு 15 மைல் தொலைவில் கட்டப்படும் அமராவதி நீர்த்தேக்க அணைக்கட்டை தோழர்கள் கே. ஏ. மதியழகன், தில்லை-வில்லாளன், உடுமலையான், ப. நாராயணன், பண்ணன் முதலியோர் பார்வையிட்டனர்.

★

எலையமுத்தூர் :

15—3—56 வியாழன் மாலை, எலையமுத்தூர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தோழர் ப. நாராயணன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் கே. ஏ. மதியழகன், தில்லை-வில்லாளன், புலவர் பண்ணன் ஆகியோர் பேசினர். (ந. கி.)

இலவடியில் எத்தர்களின் போக்கு

கழகக் கொடிகளைக் கண்டு வயிற்றெரிச்சல்

சின்ன சேலத்திற்கடுத்த இலவடி என்னும் ஊரில் 18—3—56 அன்று சின்ன சேலம் தி. மு. கழகச்செயலாளர் அம்பாயிரம் அவர்களால் தி. மு. கழகக் கொடி உயர்த்திவைக்கப்பட்டது. அவ்வூரிலிருந்த ஏராளமான பொதுமக்கள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

ஆனால் கழக வளர்ச்சியைக் கண்டு மன எரிச்சல் கொண்ட இரண்டொரு காலிகளால் 19—3—56 அன்று கழகக் கொடிக் கம்பம் அகற்றப்பட்டு, கொடியும் எரிக்கப்பட்டதாகத் தெரியவரவே கழக நிர்வாகிகள், உடனே போலீஸ் அதிகாரிகளிடம் புகார் செய்துள்ளனர். போலீஸ் அதிகாரிகளும் தக்க நடவடிக்கை எடுக்க உறுதியளித்திருப்பதாயும் தெரிய வருகிறது.

காலிகளின் இந்தப் போக்கினால் இலவடி என்னும் அக்கிராமத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளதுடன், பொது மக்களின் ஆதரவும் திரண்டு மீண்டும் அவ்வூரில் கொடியேற்றி வைத்து பொதுக் கூட்டமும் நடத்துவதற்கு கழக நிர்வாகிகளை ஊக்குவித்துள்ளனர்.

‘தமிழ்ப் பிரதேசங்களை சென்னையுடன் இணைப்பதே சரியானது’

‘அவற்றைத் தமிழ்நாட்டுடன் இணைப்பதுதான் நியாயமானது’

‘நவ இந்தியா’ தரும் கருத்து

“சென்னை-கேரள எல்லை திருத்தம், அநேகமாக புனரமைப்புக் கமிஷன் சிபாரிசுமீது சர்க்கார் செய்த முடிவை அனுசரித்தே இருக்கும்; அதாவது, செங்கோட்டை தாலுகாவில் பாதியும், கமிஷன் சிபாரிசு செய்த இதர நான்கு தாலூகாக்களும் சென்னை ராஜ்யத்துடன் இணைக்கப்படும். தேவிகுளம், பீர்மேடு, சித்தூர் தாலூகாக்கள் கேரளத்திலேயே இருக்கும். இத்தாலூகாக்கள் யாவும் தமிழர் பெருவாரியாயுள்ள பிரதேசங்கள். ஏறக்குறைய மொழி அடிப்படையில்தான் இப்போது ராஜ்யங்களும் திருத்தியமைக்கப்படுகின்றன. ஆகையால் கேரளத்தில் எஞ்சி நிற்கும் தமிழ்ப் பிரதேசங்களையும் சென்னை ராஜ்யத்துடன் இணைப்பதே சரியானது. மலையாள ராஜ்யத்தில் தமிழரைச் சிறுபான்மையினராக்கி அவர்களுக்குச் சட்டபூர்வமான பாதுகாப்பளிப்பதைவிட, அவர்களைத் தமிழரோடு தமிழராகச் சேர்த்து வாழவிடுவது நல்லதல்லவா? அன்றியும் இப்பிரதேசங்கள் சென்னை ராஜ்ய எல்லையை ஒட்டியிருப்பதால், அவற்றைத் தமிழ் நாட்டுடன் இணைப்பதுதான் நியாயமானதும்கூட, ஒருவேளை கேரள நாட்டினர் இதற்கு இணங்காமல் தகராறு செய்தால், மத்திய சர்க்கார் ஒரு எல்லைக் கமிஷனை நியமித்து இதற்கு சுமுகமான முடிவு காணவேண்டும்.”

—17-3-56 ‘நவ இந்தியா’ இதழ் தலையங்கத்தின் ஒரு பகுதியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கெயிட்ஸ்கெல்—மாலங்காவ் சந்திப்பு

பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவரான கெயிட்ஸ்கெல், கடந்த வெள்ளிக்கிழமையன்று, பிரிட்டன் வந்துள்ள ரஷ்ய உதவிப் பிரதமர் ஜார்ஜ் மாலங்காவைச் சந்தித்து உரையாடியிருக்கிறார்.

அதுபோது அவர், ஒரு ஜனநாயக ஆட்சியில் எதிர்க்கட்சி இருக்கவேண்டியதின் அவசியத்தை மாலங்காவிற்கு உணர்த்தியதாகவும், ஒரு கம்யூனிஸ்டு நாட்டிலிருந்து வருபவருக்கு இதை உணர்த்துவது அத்தனை சுலபமானதல்ல என்றும் கெயிட்ஸ்கெல் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும் போது குறிப்பிட்டிருக்கிறார்.

தோழர் லோகநாதன்

டில்லி மக்கள் சபைக்கு திருவள்ளூர் தொகுதியில் 8—4—56 அன்று நடைபெறவிருக்கும் உப தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகரை எதிர்த்துப் போட்டியிடும் சுயேச்சை அபேட்சகரான தோழர் ஆர். லோகநாதன் அவர்களுக்கு யானைச் சின்னம் வழங்கப்பட்டிருக்கிறது எனத் தெரியவருகிறது.

தேசீயமயமான இன்ஷ்யூரன்ஸ் தொழில்

மைசூர், திரு-கொச்சி சர்க்கார் நிறுவனங்களையும் டெல்லி மேற்கொள்ளுமாம்

“மைசூர், திரு-கொச்சி சர்க்கார்கள் இப்போது நடத்திவரும் இன்ஷ்யூரன்ஸ் தொழிலையும் ஏற்றுநடத்த, டில்லி சர்க்கார் எண்ணியுள்ளது,”

என்று, நிதி மந்திரி தேஷ்முக் டில்லி மக்கள்சபையில் தெரிவித்திருக்கிறார்.

இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் மசோதாவை ஒரு பொறுக்குக் குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்ற தனது தீர்மானத்தின் மீது பேசுகையில் மேற்கண்ட தகவலை அவர் தந்தாராம்.

டெல்லி முடிவுக்கு எதிர்ப்பு

“திரு-கொச்சி சர்க்கார் நடத்திவரும் இன்ஷ்யூரன்ஸ் தொழிலை டில்லி சர்க்கார் மேற்கொண்டு நடத்துவது என்பது தேவை இல்லாதது மட்டுமல்ல; முறையானதுமல்ல”

என்று, பிரதமர் நேருவிடமும் நிதி மந்திரி தேஷ்முக்கிடமும் முறையிட்டிருப்பதாக திரு-கொச்சி முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்தமேனன் தெரிவித்திருக்கிறார்.

இன்னும் அதற்கு டில்லியிலிருந்து பதில் வரவில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

திரு-கொச்சி அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் 1934-ம் ஆண்டு துவக்கப்பட்டது. ஆயுள், நெருப்பு முதலிய இன்ஷ்யூர் தொழில் நடத்தப்படுகிறது.

டெல்லி, ஆயுள் இன்ஷ்யூரன்சை மட்டும் மேற்கொள்ளுமாம்.

இப்போது 60,000 பாலிசிகள் உள்ளன.

இன்ஷ்யூரன்ஸ் மொத்தத் தொகை ரூ. 2 கோடி வரை இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

திரு—கொச்சி இன்ஷ்யூரன்ஸ் இலாகா தொழிலை சர்க்கார் திறமையுடன் நடத்தி வருவதாயும், மிகக் குறைந்த விகிதத்தில்—அதாவது 11 சத விகிதம் மட்டுமே ‘பிரீமியம்’ வசூலிக்கப்படுவதாகவும், இதர கம்பெனிகளில் 29 சத விகிதம் வரை வசூலிக்கப்படுவதாகவும், மைசூரில் 16 சத விகிதம் வசூலிக்கப்படுவதாகவும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

திரு—கொச்சி இன்ஷ்யூரன்ஸ் இலாகாவில் 180 ஊழியர்களும், 300 தீவிர ஏஜெண்டுகளும் இருக்கிறார்கள்; 1955—56ம் ஆண்டில் மட்டும் ரூ 1·5 கோடிக்கு தொழில் நடந்திருக்கிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், ‘போர்வாள்’ ஆசிரியர் காஞ்சி-மணிமொழியார் அவர்களும் 6—3—56-ல் வாலாஜாபாத் இந்துமத பாடசாலையைப் பார்வையிட்டபோது எடுக்கப்பட்ட படம்.

★

கல்விக் கொடைவள்ளல் வாலாஜாபாத்

வா. தி. மாசிலாமணியாருக்கு பொதுச்செயலாளர் பாராட்டு

6—3—56 அன்று தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், ‘போர்வாள்’ ஆசிரியர் காஞ்சி-மணிமொழியார் அவர்களும், வந்தவாசியை அடுத்த கீழ்க்கொடுங்காலூரில் தி. மு. கழகத் துவக்க விழா ஆற்றுவதற்காகச் சென்றபோது, இடையில், வாலாஜா ஆற்றங்கரையில் அழகுற அமைந்துள்ள இந்துமதப் பாடசாலையைப் பார்வையிட்டனர்.

அவர்களை திரு. வா. தி மாசிலாமணியார் அவர்களும், பள்ளி ஆசிரியர்களும் அன்போடு வரவேற்று, வகுப்பறைகள், உணவுக்கூடம், 650 மாணவர்களும் தங்குவதற்கான வள்ளலார் மாணவர் இல்லம், தொழிற்சாலை ஆகிய பள்ளியின் பல்வேறு பகுதிகளைக் காண்பித்தனர்.

பள்ளியின் அமைப்பு, நடைமுறைகள், மாணவர்களின் ஒழுங்கு, திறமை, கட்டுப்பாடு, தொழில்துறைப் பயிற்சி இத்தனையும் பொதுச்செயலாளரின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன.

அலுமினியப் பாத்திரங்கள் செய்தல், ஜமுக்காளம்-பைஅணி நெய்தல், ‘பிளாஸ்டிக்’ சாமான்கள் செய்தல், மாட்டுக் கொம்பிலிருந்தும் மரப் பலகையிலிருந்தும் பொம்மைகளும், பொத்தான்களும் உருவாக்குதல், அச்சுக் கோர்த்தல், புத்தகம் கட்டுதல் ஆகிய பற்பல தொழில்களில் மாணவர்கள் பயிற்சி பெறுவது, அவர்களது பிற்கால வாழ்க்கை பள்ளியிலேயே உருப்பெறுகிறதென்பதை உணர்த்தின.

சாரணக் குழு, குருலயர் கூட்டம், விரதசாரி அணி, விளையாட்டுப்படை, பாலர் பயிர்ப்பண்ணை ஆகியவற்றைக் கண்டு பொதுச் செயலாளர் பெரிதும் மகிழ்ந்தார்.

பிறகு நடைபெற்ற ஆசிரியர்களும், மாணவர்களும் அடங்கிய கூட்டத்தில் திரு. காஞ்சி-மணிமொழியார் சிறிது பேசிய பின், பொதுச்செயலாளர் அவர்கள் கருத்துச் செறிவுள்ள நீண்டதொரு அறிவுரையை மாணவர்கட்கு வழங்கியதோடு திரு மாசிலாமணியார் அவர்களின் பேருழைப்பையும், உண்மைத் தொண்டினையும், கல்விக் கொடையையும், அன்புள்ளத்தையும், தமிழ்ப் பற்றினையும் மிகமிகப் பாராட்டிப் பேசி, இத்தகைய சிறந்ததொரு குரு குலத்துக்குத் தாம் வருகைதர நேர்ந்ததற்குத் தமது மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

‘தேவிகுளம், பீர்மேடு சென்னையுடன் இணைக்கப்படாததேன்?’

‘தி. கொ. சர்க்கார் விரும்பாததே காரணம்’

‘வேறு ஒரு மொழியினருடன் தமிழ் பிரதேசங்களைப் பிணைத்துவிடுவதற்கு நியாயம் கூற முடியாது’

மீண்டும் கோயங்கா ஏடு தமிழருக்குப் பரிந்து பேசுகிறது

“நெய்யாற்றின்கரை தாலூகாவின் தமிழ்ப் பகுதிகள், தேவி-குளம், பீர்மேட்டில் தமிழ்ப் பாகங்கள், சித்தூர் தாலூகா, பாலக்காட்டுப் பகுதி முதலியவை, எந்த நியாயப்படி பார்த்தாலும், சென்னையுடன் சேர்க்கப்பட வேண்டியவை, “தி-கொ” சர்க்கார் அவற்றைத் தர விரும்பவில்லை என்ற காரணத்தினால் சீரமைப்பு கமிஷனது முடிவுகளை மாற்றவில்லை. இது நியாயமற்றது.

“சென்னை எல்லையைச் சேர்ந்தாற் போல உள்ளவையும், தமிழர் பெரும் பாலோராக உள்ளவையுமான இப்பகுதிகளை கேரளத்தில் விட்டு வைப்பது தகராறை வளர்த்து, சூழ்நிலையைக் கெடுக்கத்தான் பயன்படும். அத்தகைய போக்கைக் கேரளசர்க்காரே விரும்ப மாட்டார்கள். எல்லைக் கமிஷன்களை நியமித்து அவசியப்படும் மாறுதல்களைச் செய்யப் போவதாக மசோதா கூறுகிறது. அதன் பகுதியாக இந்தப் பிரச்னைகளெல்லாம் கவனிக்கப்பட வேண்டும். ஆந்திராவுடனும், கேரளாவுடனும் உள்ள எல்லைத் தகராறுகளை ஆராய்ந்து முடிவு கட்ட ஒரு கமிஷன் அல்லது இரண்டு கமிஷன்களை இந்திய சர்க்கார் நியமி[illegible]து அவசியம். இதைத் தாம[illegible]ன்றிச் செய்யவேண்டும்.

“[illegible]விகுளம்-பீர்மேடு இரண்டு[illegible]மனித வாழ்வற்ற காடு[illegible]க இருந்து, மலைத் தோட்[illegible]ங்களாக மாறியவை. அவை எங்கே இருக்கவேண்டும் என்பதற்கு சரித்திர உரிமை கொண்டாடுவது அர்த்தமற்றது.

‘இப்பொழுது அங்கே இருப்பவர்களில் பெரும்பாலோர் யார்? அடுத்தாற்போல வுள்ள எந்த ராஜ்ய மக்களின் மொழியை பேசுகிறார்கள்? இந்த இரண்டுந்தான் கவனிக்கப்பட வேண்டியவை. அங்குள்ள மக்களின் கருத்தை யறிந்து முடிவு செய்வதுதான் நியாயம் என்று கருதினால் அதற்கு வழி செய்யவேண்டும். வேறு ஒரு மொழியினருடன் அத்தகைய எல்லைப் பகுதித் தமிழ்ப் பிரதேசங்களை பிணைத்து விடுவதற்கு நியாயம்கூற முடியாது. இது அமைதியான முறையில், புத்தி பூர்வமாக திருத்தப்பட வேண்டியது அவசியம்.”

—18-3-56 ‘தினமணி’ இதழ் தலையங்கத்தின் ஒரு பகுதியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

போலீஸ்காரரைத் தாக்கிய மக்கள் சபை உறுப்பினர்

ஒரு நாள் சிறைத் தண்டனையும் ரூ. 1,000 அபராதமும் விதிக்கப்பட்டார்

பம்பாய், மார்ச் 19—

ஒரு போலீஸ்காரர், ஒரு சிறை அதிகாரி ஆகிய இருவரையும் தாக்கிய குற்றத்திற்காகப் பகவதீ சரன் சுக்லா என்ற மக்கள் சபை உறுப்பினருக்கு நகர நீதிபதி ஒருவர் ஒரு நாள் சிறைத் தண்டனையும், ரூ. 1,000 அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்திருக்கிறார்.

‘ரிவால்வர்’ ஒன்றை ‘லைசென்ஸ்’ இன்றி வைத்திருந்ததாயும், ஒரு போலீஸ் அதிகாரியையும் தாக்கியதாகவும், சாட்டப்பட்ட வேறு இரு குற்றங்களும் ருசுப்பிக்கப்படவில்லை என்று நீதிபதி தள்ளிவிட்டார்.

கடந்த 1954 ஜூலையில் வேலையில் இருந்த போலீஸ்காரர் ஒருவரைத் தாக்கியதாகவும், பின்னர், பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த போது ‘லைசென்ஸ்’ இல்லாது கைத்துப்பாக்கி ஒன்று வைத்திருந்த தைரியத்தில் ஒரு போலீஸ் அதிகாரியையும், சிறை அதிகாரியையும் தாக்கியதாகவும் இந்த மக்கள் சபை உறுப்பினர்மீது குற்றம் சுமத்தப்பட்டது.

பலமுறை ‘சம்மன்’ அனுப்பியும், இவர் நீதிமன்றத்திற்கு வராமையால், இவரைக் கைதுசெய்து அழைத்து வருமாறு நீதிபதி ‘வாரண்ட்’ பிறப்பித்திருக்கிறார். பின்னர்தான் 1956 பிப் 25-ந் தேதியன்று டெல்லி போலீசாரிடம் அவர் தாமாகவே சரணடைந்தாராம். அதன் பின், வழக்கை விசாரித்த நீதிபதி அவருக்கு அந்தத் தண்டனை வழங்கியிருக்கிறார்.

தான் குற்றவாளி அல்ல என்று வாதாடிய அவர், உயர்நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்யப் போவதாகக் கூறியிருக்கிறாராம்.

புதிய பஞ்சாப் மாநில தலை நகர்

தாராசிங் கருத்து

புதிய பஞ்சாப் மாநிலத்தின் தலைநகராக தொடர்ந்து சந்திகார் இருக்கவேண்டுமென்பதற்கு மாஸ்டர் தாராசிங் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்.

‘அமிர்தசரஸ், லூதியானு, பாடியாலா இவற்றில், ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து சந்திகாரைவிட தலை நகராயிருப்பதற்குத் தகுதியானதாகும்’. என்றும், என்றாலும், இப்போது தலைநகர் பற்றிய பிரச்சினையை எழுப்பப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

சென்னை சர்க்காரின் நன்கொடை

‘சங்கீத நாடக சங்க’த்துக்கு நன்கொடை வசூலிக்க முடியவில்லையாதலால் சென்னை சர்க்காரே முழு செலவையும் நன்கொடையாக ரூ 30,000 அளித்தனராம்.

பண்டித பந்த் தரும் விசித்திர வியாக்கியானம்

'பட்ஜெட்' அம்பலமானதற்கு மந்திரி சபை பொறுப்பல்லவாம்

மரபு காக்க மறந்ததற்கு நொண்டி சமாதானம் கூறுகிறார்

புதுடில்லி, மார்ச் 20—"மத்திய சர்க்காரின் 'பட்ஜெட்' இரகசியங்கள் அம்பலமானதின் சம்பந்தமாக, மக்கள்சபையில் ஒரு ... தீர்மானம் வந்தபோதே ... யமைச்சர் தேஷ்முக் ... நாமாச் செய்யத் த... யிருந்தார்; ஆனால் அ... டைய இராஜிநாமாவை... பிரதம மந்திரி ஏற்றுக் கொள்ளவில்லை.

"இலஞ்சம் வாங்கிப் பிழைக்கும் யாரோ ஒருவன், எங்கேயோ விஷமம் செய்தான் என்பதற்காக தேஷ்முக்கின் தொண்டினை இழப்பது அர்த்தமற்றதாயிருந்திருக்கும். இராஜிநாமாச் செய்ய வேண்டியதில்லை யென்று நாங்கள் வற்புறுத்திய பின்னர் அவர் அதை 'வாபஸ்' பெற்றுக்கொண்டார்."

என்று, மத்திய சர்க்கார் உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் தெரிவித்தாராம்.

'பட்ஜெட்' இரகசியங்கள் வெளியானது உண்மையே என்பதை பண்டித பந்த் ஒப்புக்கொண்டு, "மந்திரி சபையிலுள்ள யாருக்கும் இதில் பொறுப்புண்டு என்பதை நான் பலமாக மறுக்கிறேன். சதிகாரர்களுக்கும், அதனால் பலனடைந்தவர்களுக்கும் தவிர, வேறு யாருக்கும் அதுபற்றி ஒன்றும் தெரியாது," என்றும், அவர் கூறியுள்ளாராம்.

இரகசிய அச்சுக்கூடம் ஏற்படுத்தப்படுமாம்!

மத்திய சர்க்காரின் 'பட்ஜெட்' விபரங்கள் அம்பலமானதிலிருந்து, 'பட்ஜெட்' பிரரேபணைகளை அச்சடிப்பதற்கெனத் தனியாக ஒரு இரகசிய அச்சுக்கூடம் ஏற்படுத்துவது குறித்து, அரசினர் யோசித்துக்கொண்டிருப்பதாக மத்திய சர்க்கார் நிதியமைச்சர் தேஷ்முக் கூறியுள்ளாராம்.

கோவிந்தப் பெருமான் ஆலயத்தில் களவு

ரூ. 2½ இலட்சம் பெறுமான வைர அணிகலன்கள் அபேஸ்

ஜெய்ப்பூர், மார்ச். 20—வடநாட்டில் பிரதி பெற்ற கோவில்களில் ஒன்றான ஜெய்ப்பூரிலுள்ள கோவிந்தாஜி ஆலயத்திலிருந்து, ரூ. 2½ இலட்சம் மதிப்பு வாய்ந்த வைர அணிகலன்களும், தங்கப்பொருட்களும் களவாடப்பட்டிருப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

இத்திருட்டு சம்பந்தமாக கோவில் பணிபுரிவோர் சுமார் 100 பேர் விசாரிக்கப்பட்டு வருகின்றனர். இதுவரையிலும் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளாராம்.

பொருளைப் பறிகொடுத்த பெருமான் கோவில், இராஜஸ்தானைச் சேர்ந்த ராஜப் பிரமுகருக்கு சொந்தமாம்.

சித்தூர் தமிழ்ப் பகுதிகள்

மந்திரிகளிடம் தூதுக் குழு முறையீடு

"மாநில புது அமைப்பு மசோதா சட்டமாக்கப்படு முன்பாகவே, சித்தூர் மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பகுதிகள் தமிழ் நாட்டுடன் இணைக்கப்பட சென்னை, மத்திய சர்க்கார்கள் வழிவகை செய்ய வேண்டும்."

என்று, சித்தூர் தமிழர் பிரதிநிதி 'கோஷ்டி' ஒன்று, நிதி மந்திரி சுப்பிரமணியத்தையும், முதன் மந்திரி காமராசரையும் சந்தித்து வற்புறுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

இந்தக் குழுவினர் டில்லிக்கும், ஆந்திராவுக்கும் தங்கள் கோரிக்கையை அனுப்பியுள்ளனராம்.

மாநில புது அமைப்பு மசோதாவில் தமிழ் வட்டங்கள் பற்றி திட்டவட்டமான குறிப்பு ஏதும் இல்லை; எனவே, ஆந்திர—சென்னை சர்க்கார்கள், நிலைமைத் தெளிவாக்கித் தேவையான மாற்றங்களைச் செய்ய முன்வர வேண்டுமென்றும் கோரியதாகத் தெரிகிறது.

பிரதிநிதி குழுவிற்கு கே. விநாயகம் தலைமை தாங்கிச் சென்றிருக்கிறார்.

தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும் தாராள உதவி!

கிராம எண்ணெய் உற்பத்தித் தொழில் அபிவிருத்திக்காம்!

புதுடில்லி, மார்ச். 20—கிராம எண்ணெய் உற்பத்தித் தொழிலின் அபிவிருத்திக்காக இந்திய சர்க்கார் மேற்கொண்டு சகாயத் தொகைகளும், கடன் உதவியும் வழங்கியுள்ளனராம்.

சென்னை மாநிலத்திற்கு உதவித் தொகையாக ரூ. 1,87,400-ம் கடனாக ரூ. 30,000 அளிக்கப்பட்டிருக்கிறதாம். உதவித் தொகை, 15 மாதிரி உற்பத்தி நிலையங்களையும், ஒரு பயிற்சி நிலையத்தையும் ஏற்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருக்கிறதாம்.

மாதிரி நிலையங்கள் ஒவ்வொன்றிலும், பழைய எண்ணெய்ச் செக்குகளில் இருபத்தைந்தை,நவீன ரகசெக்குகளாக மாற்றியமைப்பதற்காக, செக்கு ஒன்றுக்கு ரூ. 100 வீதம் சகாயத் தொகை வழங்கப்படுமாம்; மற்றும், ஒவ்வொரு நிலயத்திலும் 25 மாணவர்களுக்கு இரண்டு மாத காலத்திற்குப் பயிற்சி அளிக்கப்படுமாம்.

பயிற்சி நிலயத்தில், 15 அமைப்பாளர்களுக்கும், 15 தச்சர்களும், எண்ணெய் ஆட்டுபவர்கள் 15 பேருக்கும், இரண்டு மாத காலத்துக்கு உதவிச் சம்பளம் வழங்கப்படுமாம்.

சென்னைக்குகிடைக்கும் யோகமே யோகம்!

நவீனஇயந்திரமுறையில் செருப்பு தயாரிக்கும் தொழிற்சாலையாம்

சென்னை, மார்ச். 17—செருப்புகள் தயாரிப்பு, பழுது பார்க்கும் தொழிற்சாலை யொன்று அரசாங்கத்தினரால், பெரம்பூரில் விரைவில் ஏற்படுத்தப்படுமாம்.

செருப்பு தைப்பதில் நவீன இயந்திர முறைகளை பயன் படுத்துவதின் அனுகூலத்தை எடுத்துக்காட்டுவதே, அரசினரின் நோக்கமாம். இம்முறைகளில் வருடந்தோறும் 20 பேர்களுக்கு பயிற்சி அளிக்கவும் வகை செய்யப்படுமாம்.

இத்தொழிற்சாலைக்கான அமைப்புச் செலவு ரூ. 4,46,415 ஆண்டு முழுவதும் நடப்புச் செலவு ரூ. 7,17,765.

திருவல்லிக்கேணியிலும் ஒரு மாதிரி செருப்புத் தொழிற்சாலை ஏற்படுத்தி 12 பேர்களுக்கு பயிற்சியளிக்க வசதி செய்யப்படுமாம்.

அறிவிப்பு

'நம் நாடு' இதழ் சம்பந்தப்பட்ட சந்தா-நன்கொடை - ஏஜென்சி பட்டியல் தொகை-விளம்பரக் கட்டணம் ஆகியவைகளை நிர்வாகி, 'நம் நாடு' என்ற முகவரிக்கும், பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டிய செய்திகள், அறிக்கைகள் சம்பந்தப்பட்டவைகளை ஆசிரியர் 'நம்நாடு' என்ற முகவரிக்கும் அனுப்பிவைக்க வேண்டும் எனத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

—நிர்வாகி: 'நம் நாடு'

வெற்றி பெறவில்லை?

மீன் வளர்ப்புக்குச் செலவிட்ட தொகை பாழ்!

சென்னை, மார்ச் 20—தஞ்சை மாவட்டத்தில் நெல் வயல்களில் மீன் வளர்ப்புத் திட்டம் வெற்றியடையவில்லை என்றும், இருமுறைகளில் பெருமழை பெய்து கழனிகள் வெள்ளக்காடாகப் போய்விட்டதென்றும், இத்திட்டத்தால் சென்னை மாநில சர்க்காருக்கு ரூ. 5,467 செலவென்றும் சென்னை விவசாய அமைச்சர் சட்டசபையில் கேள்வி நேரத்தின் போது தெரிவித்துள்ளார்.

பாக் - இந்தியப் போலீசார் துப்பாக்கிச் சண்டை

12 நாட்களில் 5 முறை நடைபெற்றுள்ளதாம்

அமிர்தசரஸ், மார்ச் 20—இங்கிருந்து 20 மைல் தொலைவில் உள்ள நுஷேஹ்ரதல் எனுமிடத்தில், இன்று இரவு 9 மணி அளவில், பாகிஸ்தான் எல்லைப் போலீசார் இந்திய எல்லைப் போலீசார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக இங்கு கூறப்படுகிறது.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்திற்கான காரணங்களோ, விவரங்களோ கிடைக்கவில்லையாம்.

போலீஸ் இலாகாவின் பெரிய அதிகாரிகள் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

கடந்த 12 நாட்களுக்குள்ளாக, பாகிஸ்தான் போலீசார் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபடுவது இது ஐந்தாவது முறை என்று கூறப்படுகிறது.

கடந்த மார்ச் 8, 10, 14-ந் தேதிகளில், கெம்கரன் அருகில் உள்ள முதியன்வாலா எனும் இடத்தில் பாக். போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், நான்காவது முறையாக, பெரோஸ்பூர் மாவட்டத்தில், உசேன் பாலா எனும் இடத்தில் மார்ச் 18, 19-ந் தேதிகளில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

முதல் மூன்று சம்பவங்களிலும், எல்லைப் போலீசார் மட்டும் அதில் ஈடுபட்டதாயும், நான்காவது சம்பவத்தின்போது இருதரப்பு இராணுவப் பிரிவுகளுமே ஈடுபடுத்தப் பட்டதாயும் கூறப்படுகிறது.

14 மணி நேரமாக துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற பிறகு, நேற்றுத்தான் சண்டை நிறுத்த உடன்பாடு ஏற்பட்டதாயும் கூறப்படுகிறது.

'ரிக்ஷா'க்களை ஒழிக்க டில்லி திட்டம்

மாநிலங்களைக் கேட்டுள்ளதாம்

புதுடில்லி, மார்ச் 17—மனிதர் இழுக்கும் 'ரிக்ஷா'க்களை நாளடைவில் படிப்படியாக ஒழித்து விடுவதற்குரிய திட்டமொன்றை வகுக்குமாறு மாநில அரசாங்கங்களை டில்லி சர்க்கார் கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

275 படுக்கை கொண்ட....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதரருக்குத் தனி உணவும் தரப்படுகிறதாம்.

சாதாரண உணவு பெறுபவர்களுக்கு இரண்டு இட்லியும் சாம்பாரும் வரும் ஏப்ரல் மாதம் முதல் தரப்படுமாம்; இதற்காக இரண்டு சமையற்காரர்கள் நியமித்துக்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறதாம்.

கழகக் கூட்டம்

★

நல்லூர்-கந்தம்பாளையம் பிள்ளையார் கோயில் அருகில் 23-3-56 மாலை 4-30 மணிக்கு

தலைவர்: கே. அருணாசலம்

பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
ஏ. எஸ். இராமச்சந்திரன்
என். எஸ். பழனிச்சாமி
ஏ. கே. ஆறுமுகம்

சி. டி. டி. அரசு

தி. மு. கழகப் பொதுக்குழு உறுப்பினரான சென்னைத் தோழர் சி. டி. டி. அரசு அவர்கள் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். சென்னை மாவட்ட முன்னாள் தி. மு. க. செயலாளர் தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள் அன்னாரின் உடனிருந்து கவனித்து வருகிறார்.

நீர்ப்பாசனத் திட்டங்களுக்குக்கூட ஏன் இந்தக் கதி?

கோரியவை 13; அனுமதி கிடைத்ததோ 6!

மந்திரி இராமநாதபுரம் இராஜா அழுது புலம்புகிறார்

சென்னை, மார்ச் 20—"சென்னை மாநில சர்க்கார், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கென மொத்தம் 13 புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை அனுப்பிவைத்தது. ஆனால், அவற்றில் 6 திட்டங்களை மட்டுமே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க மத்திய அரசாங்கம் வழிவகை செய்தது."

என்று, சென்னை சர்க்கார் மராமத்து இலாகா அமைச்சர் சண்முக இராசேசுவர சேதுபதி சட்டசபையில் கூறியுள்ளார்.

கோவை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலுள்ள நிலங்கள் பயனடையும் விதத்தில், மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உற்பத்தியாகி ஓடிவரும் ஆறுகளுக்கு பெரிய அணைக்கட்டுகளைக் கட்டி தண்ணீரைத் திருப்ப முடியுமா என்பதுபற்றி சென்னை அரசியலார் பரிசீலனை செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது:—"1947-லிருந்து தொடங்கும் 10 ஆண்டுக்காலத்தில் சென்னை மாநில நீர்ப்பாசன வளர்ச்சித் திட்டங்களுக்காக மட்டும் சர்க்கார், ரூ 40 கோடி செலவிட்டிருக்கிறது; சென்ற வருடம் இத்துறைக்கென்றே ரூ. 7·74 - கோடி ஒதுக்கப்பட்டுள்ளது; இவ்வருடம் ரூ 8·19 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது."

சென்னை சர்க்கார் அக்கறையின்மை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"தொழிலாளர்கள் நியாயமாக அதை எதிர்த்தார்கள்; வேலைநிறுத்தம் செய்தார்கள்; ஏனெனில், அந்த முறை, வேலை அளவைக் குறைத்து, வேலை செய்யும் தொழிலாளரின் எண்ணிக்கையையும் குறைத்து விடும். அந்த வேலை நிறுத்தத்தைச் சட்டவிரோதமானது என்று பிரகடனம் செய்யும் துணிவிருக்கவில்லை. ஆனால், நிர்வாகிகள் வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களை நீக்கி விட்டுப் புதிய தொழிலாளர்களை அமர்த்திக் கொள்ளுவதற்கு எல்லாவகையான ஆதரவையும் தந்தார்கள். சர்க்கார் அதிகாரிகள் முழுவதும் முதலாளிகள் பக்கமே நின்றனர். இதுபற்றி விசாரணை செய்ய வேண்டும் என்ற கோரிக்கைக்குக் கூட சர்க்கார் இணங்கவில்லை.

"தொழிலாளர்கள் அமைதியாக மறியல் செய்யக்கூட அனுமதிக்கப்படவில்லை. தடையுத்தரவு விதிக்கப்பட்டது. தொழிலாளர் தலைவர்கள்தான் தொழிலாளரைப் பலாத்காரத்திற்குத் தூண்டுவதாகக் குற்றம் சாட்டப்பட்டது; பழி சுமத்தப்பட்டது."

ஏதோ இது குறித்து சட்டம் கொண்டு வரப்போகிறார்கள் என்பதற்காக நிறுத்திவைக்கப் பட்டிருப்பது வருந்தத்தக்கதாகும். ஆனால் டில்லி சர்க்கார், அண்மையில் அப்படி ஒரு சட்டம் கொண்டுவரப்போவதாகக் காணோம்.

"தொழிற் சட்டங்கள் சரிவர, கண்டிப்பாக அமுல் செய்யப்படாததினால், தொழிலாளர்கள் பெரும் அவதிக்கு ஆளாகிறார்கள்; மேலும் இப்போது விலைவாசிகள் ஏறிக்கொண்டிருப்பதால், பெரும் கஷ்டத்திற்கு ஆளாகியுள்ளனர். எனவே, சர்க்கார், தொழிலாளர்களுக்கு உடனடியாக கிராக்கிப் படியேனும் அதிகமாகத் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்."

மற்றும்இ பேசிய உறுப்பினர்கள், மின்சார இலாகா தொழிலாளர்களுக்கும், மருத்துவமனைத் தொழிலாளர்களுக்கும் நியாயமான சம்பள நிர்ணயம் வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறார்கள்.

எஸ். பக்கிரிசாமி.:

"(ஷாப்) கடைகள், நிறுவனங்கள் சட்டத்தைத் திருத்துவதற்காக இந்த சர்க்கார் தயாரித்த மசோதா, டில்லி சர்க்கார்

1955-ல் தேசியத் தொண்டர் படை மொத்தம் 58,236 பேருக்குப் பயிற்சியளித்தது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.